(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 74 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, மார்ச்சு 05, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0121 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,—வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) உலகெங்கிலும் உள்ள எமது தூதரகங்களின் எண்ணிக்கை எத்தனையென் பதையும்,

(ii) தூதுவர்களது பெயர்கள், அவர்களது தொழில்வாண்மைகள், தொழில் அனுபவங்கள் என்னவென்பதையும்,

(iii) அவர்கள் தொழில்வாண்மை மிக்க இராஜதந்திரிகளாக அல்லது அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டவர்களா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு தூதரகத்திலும் பணியாற்றுகின்ற பணியாட்டொகுதி உறுப்பினர் களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அவர்களது பெயர்கள், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம் மற்றும் ஏனைய சகல நன்மைகள் எவையென்பதை தனித்தனியாகவும்,

(iii) கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு தூதரகத்தையும் கொண்டு நடத்துவதற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு என்பதை தனித்தனி யாகவும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வெளிநாடுகளில் உருவாக்கப்பட்ட இலங்கை நட்பு அமைப்புகள், சமூகங்கள், மன்றங்கள் அல்லது விஷேட நலன் குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவை உருவாக்கப்பட்ட நாடுகள் எவை என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0125 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத் துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேற்பதற்கு,—(2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக கூட்டுத்தாபன மொத்த விற்பனைக் கம்பனியை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உருவான தேதியும்,

(ii) உண்மையிலேயே அது நிகழ்ந்து உருப்பெற்ற திகதியையும்,

(iii) கம்பனியின் மூலதனத்தையும்,

(iv) பணிப்பாளர் மற்றும் பங்குரிமையாளர்களின் பெயர்களையும்,

(v) அது கூட்டிணைக்கப்பட்ட திகதியிலிருந்து இற்றை வரையிலான அனைத்து இறக்குமதிகளையும்,

(vi) அவற்றிற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்,

(vii) அப்படியாயின், அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற கேள்விப்பத்திர சபையின் (CATB) இறுதி விதந்துரைகளுடன் கேள்வி கோருநர்களின் பெயர்கள் மற்றும் கேள்வித் தொகைகள் என்பவற்றையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கம்பனியின் இற்றைவரையிலான மொத்தப் புரள்வு மற்றும் ஈட்டப்பட்ட இலாபங்கள் என்பவற்றை மாதாந்த அடிப்படையிலும்,

(ii) இலாபம் புரள்வு விகிதத்தையும்,

(iii) வரையறுக்கப்பட்ட அரச வர்த்தகக் கூட்டுத்தாபன மொத்த விற்பனைக் கம்பனி கொண்டிருக்கும் சந்தைப் பங்கினையும்,

(iv) நாட்டின் நுகர்வோர் வர்த்தக விற்பனைக் கூடங்களாக மாவட்ட அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட கடைகளின் எண்ணிக்கையையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0126 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2001 ஆம் ஆண்டில் இருந்து 2005 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் பணிபுரியவென ஆட்திரட்டல் செய்யப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின் ஒவ்வொரு ஆண்டும் ஆட்திரட்டப்பட்டோரின் எண்ணிக்கை மற்றும் எப்பணி தொடர்பில் ஆட்திரட்டப்பட்டனர் என்பதையும்,

(iii) இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களின் சேவை 2004 — 2005 காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்டதா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், அதற்கான காரணம் மற்றும் அவர்கள் தொடர்பாக தற்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பவற்றையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004—2005 ஆம் ஆண்டில் சேவை முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் அவர்கள் மேலதிக பணியாளர்கள் எவரையும் ஆட்திரட்டல் செய்தனரா என்பதையும்,

(ii) மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படாத பணியாட்டொகுதி உறுப்பினர்களின் பெயர்களையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0883 / '08

4.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) "புரொன்பிரிஜ்" மின்பிடி கம்பனி இந்நாட்டில் மீன்களை இறக்குகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) "புரொன்பிரிஜ்" மீன்பிடி கம்பனியிடமுள்ள கலங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவற்றின் பதிவு இலக்கங்கள் யாவை,

(iii) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு கலமும் இந்நாட்டில் இறக்கிய மீன்களின் அளவு எவ்வளவு,

(iv) அவற்றின் உள்நாட்டுப் பெறுமதி என்ன

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) இந்த மீன்பிடி கம்பனிக்கு காலி வர்த்தக துறைமுகத்தில் மீன்களை இறக்க எந்த அடிப்படையின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது,

(ii) மேற்படி மீன்பிடி கம்பனி கடந்த ஐந்து ஆண்டுகளில் முகத்துவார மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்களை இறக்கியதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தின் நிதிப்பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0983 / '08

5.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) தனியார்மயமாக்கப்பட்ட அரச நிறுவனங்களில் எவையேனும் மீண்டும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்,

(iii) அவ்வாறு பொறுப்பேற்பதற்கான நோக்கம் யாதென்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்கள் பொறுப்பேற்கப்படும் போது இழப்பீடு வழங்கப் படுமா என்பதையும் ,

(ii) ஆமெனில், அவற்றுக்கான இழப்பீட்டை மதிப்பிடுவது எந்த நிறுவனம் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

1085 / '08

6.

கௌரவ ஜினதாச கிதுலகொட,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1997.01.01 ஆம் திகதி முதல் 2006.01.01 ஆம் திகதி வரை, அரச ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு சம்பள முரண்பாடு உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இச்சம்பள முரண்பாடு தீர்க்கப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள் வாரா?

(இ) (i) ஆமெனில், மேற்படி சம்பள முரண்பாட்டினை தீர்ப்பதற்கு இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) எதிர்காலத்தில் இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

(iii) அது எக்காலக் கட்டத்திற்குள் மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1102 / '08

7.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிலுள்ள மொத்த சதுப்பு நிலங்கள் இறுதியாக எந்த ஆண்டில் இனங்காணப்பட்டது என்பதையும்,

(ii) அப்போது தீவிலிருந்த சதுப்பு நிலங்களின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அத்துமீறி சதுப்பு நிலங்களை மீட்டல் சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்வதற்காக இலங்கை காணி மீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் பின்பற்றுகின்ற வழிமுறை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) சதுப்பு நிலங்களை இனங்கண்டு அவற்றை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான வேலைத் திட்டமொன்று இருக்கின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0997/ '08

8.

கௌரவ வை.எம்.நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2007 திசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.த.) பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை யாது,

(ii) அவர்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ.த.) பரீட்சைக்குத் தகைமை பெற்றோர் எண்ணிக்கை யாது,

(iii) இப்பரீட்சையில், சித்தி அடையாதோர் எண்ணிக்கை மற்றும் அதன் நூற்றுவீதம் என்ன,

(iv) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தியடையாத பாடசாலைகள் உள்ளனவா,

(v) அவ்வாறாயின், அப்பாடசாலைகள் யாவை,

(vi) இப்பாடசாலைகளில் இந்நிலைமை ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றி விசாரிக்கப்பட்டதா,

(vii) இது தொடர்பாக வழங்கப்பட்ட பரிகாரங்கள் உள்ளனவா,

(viii) அவ்வாறாயின், அவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0998 / ' 08

9.

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2008ஆம் ஆண்டில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது,

(ii) அப்புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை என்ன வீதம்,

(iv) அப்பரீட்சையில் 0 புள்ளி (சைபர் புள்ளி) பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதன் வீதமும் யாது,

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை, ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் போன்ற அனைத்து தரப்பினரையும் மன அழுத்தத்துக்குள்ளாக்குகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அதற்கான மாற்றுத் தீர்வு சம்பந்தப்பட்ட அமைச்சிடம் இருக்கின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1111 / '08

10.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை மத்திய போக்குவரத்து அதிகார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) பதவிக்கு யார் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்,

(ii) அவரது முழுப்பெயர் மற்றும் சொந்த முகவரி என்ன என்பதையும்,

(iii) அவரது கல்வித் தகமைகள் மற்றும் தொழில் தகமைகள் என்ன என்பதையும்,

(iv) அவர் எந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார் என்பதையும்,

(v) அவரது அடிப்படைச் சம்பளம், அனைத்து கொடுப்பனவுகளுடன் கூடிய சம்பளம், பெறும் ஏனையச் சலுகைகள், மற்றும் கொடுப்பனவுகள் எவை என்பதையும்

அவர் இந்த சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1112 / '08

11.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை மத்திய போக்குவரத்து சபையின் போக்குவரத்து கணக்கு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பவர் யாரென்பதையும்,

(ii) அவரது முழுப் பெயர் மற்றும் சொந்த முகவரி யாவையென்பதையும்,

(iii) அவரது கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவை யென்பதையும்,

(iv) அவர் மேற்படி பதவிக்கு எந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளாரென்பதையும்,

(v) அவரது அடிப்படை சம்பளம், அனைத்துக் கொடுப்பனவுகளும் அடங்கிய சம்பளம், ஏனைய சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்ப தையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

1113 / ' 08

12.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) கொழும்பு 10, மாளிகாவத்தை , ரஜபொகுண வீதியில் வதியும் திருமதி டபிள்யூ. எல். பி. சிறியாவதியினால் மாளிகாவத்தை புதிய நகரத்தில் அமைந்துள்ள ரஜபொகுண எனும் ஸ்நான கிணறு சுமார் 32 வருட காலமாக பராமரித்து நிருவகிக்கப் படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) வருடாந்தம் வரி செலுத்தி இற்றை வரை இவர் நிருவகித்துவந்த மேற்படி கிணற்றை வேறு பிரிவினருக்குப் பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பது எக்காரணத் தினால் என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) (i) மேற்படி கிணற்றுக்கு அருகில் புத்தர்சிலைக் கூடமொன்றை அமைக்கும் போது அதை உடைத்து சுமார் 5 இலட்சம் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன ரென்பதைதயும்,

(ii) மேற்படி இடத்தில் வேறு சமய வழிபாடுகளை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஒன்பது பிள்ளைகளுக்குத் தாயான திருமதி சிறியாவதிக்கு தொடர்ந்தும் மேற்படி கிணற்றை நிருவகிப்பதற்கு ஆவன செய்வதற்குரிய நடவடிக்கை அவர் எடுப்பரா?

(உ) இன்றேல், ஏன்?

1118 / '08

13.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) ஒரு பிரதேச சபை இரண்டு நகர சபைகளாகப் பிரிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய இரண்டு நிறுவனங்களுக்கும் சொத்துக்களைப் பகிர்ந்தளிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கெஸ்பாவ பிரதேச சபையானது கெஸ்பாவ நகர சபை மற்றும் பொரலஸ்கமுவ நகர சபை என்றவாறு எப்போது பிரிக்கப்பட்டது,

(ii) பொரலஸ்கமுவ நகர சபைக்குக் கிடைக்க வேண்டிய சொத்துக்கள் இற்றைவரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதா,

(iii) முறையான விதத்தில் சொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லையெனில் அதற்கான காரணம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1119 / '08

14.

கௌரவ லக்ஷ்மன் நிபுண ஆரச்சி,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தொல்பொருளியல் பெறுமதி மிக்கதென இனம்காணப்பட்டுள்ள இடங்கள் யாவை, மற்றும்

(ii) வரலாற்றுப் பெறுமதி மிக்க மத, தலங்கள் யாவை,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சிதைவுற்ற நிலையில் உள்ள வரலாற்றுப் பெறுமதி மிக்க கட்டிடங்களைப் பேணுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சரும்,— விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்ட (ஆயுதந்தாங்கிய படைகள்) (திருத்தம்),— 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்ட (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டமூலம்.

2.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சரும்,— விதுரர்களினதும் அநாதைகளினதும் ஓய்வூதியத்திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) (திருத்தம்),— 1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, விதுரர்களினதும் அநாதைகளினதும் ஓய்வூதியத்திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.1),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வராஜா கஜேந்திரன், தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008, யூன் மாதம் 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

4.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.2),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். ஜோசப் பெரேரா, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008, யூலை மாதம் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

5.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.3),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அகில விராஜ் காரியவசம், தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008, ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

6.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.4),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ என். ஸ்ரீகாந்தா, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008, ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

7.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.5),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008, செப்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

8.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.6),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அநுர திஸாநாயக்க, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008, செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும், - சுற்றாடல் பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சுற்றாடல் பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, யூலை 22 ஆம் திகதிய 1559 /10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை(இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, திசெம்பர் 30 ஆம் திகதிய 1582/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, திசெம்பர் 31 ஆம் திகதிய 1582/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2006 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் விமான நிலைய அபிவிருத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, திசெம்பர் 31 ஆம் திகதிய 1582/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும், - பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை, ___ 2008 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 2 அ ஆம் பிரிவின் கீழ் பெறுமதிசேர் வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009, சனவரி 01 ஆம் திகதிய 1582/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக் கப்படுமாக.

*6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர், - காணி எடுத்தற் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள்,- 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 63(2) (ஊ) ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 சனவரி 20 ஆம் திகதிய 1585/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*13.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*15.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*19.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம

நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*24.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

26.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29

இலங்கை கடல்கடந்த முஸ்லிம் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை. .

31.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கை நிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.